PR/2018/30T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

**ஒக்டோபர் 12, 2018**

**ஜப்பானிய உதவியுடன் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் புதுப்பிப்பு**

ஜப்பானிய உதவியுடன் புதுப்பிக்கப்பட்ட அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC) அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜப்பானியத் துாதரகத்தின் பதில் துாதுவர் டொஷிஹிரோ கிடமுரா ஆகியோரால் இரத்மலானையில் ஒக்டோபர் 12ம் திகதி மீளத்திறந்துவைக்கப்பட்டது.

'வளர்ந்துவரும் பிராந்தியங்களை இலக்காகக்கொண்ட அடிப்படை சமூக சேவைகளை மேம்படுத்துதல்' எனப் பெயரிடப்பட்ட ஜெய்க்கா(JICA) திட்டத்தின் கீழ் ஜப்பானிய அரசாங்கம் 3,935 மில்லியன் யென் ( ஏறத்தாழ 5,232 மில்லியன் ரூபா) நிதியை வழங்கியது. அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் இந்த திட்டத்தின் மூன்று முக்கியநோக்கங்களில் ஒன்றாகும். ஜப்பானிய அரசாங்கத்தின் 2.6பில்லியன் யென் மானிய உதவியின் மூலமாக 1986ம் ஆண்டில் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூடடுத்தாபனம் முதன்முறையாக ஸ்தாபிக்கப்பட்டது. புதிய உபகரணங்களை வழங்கியமை, உற்பத்திபொருட்களை களஞ்சியப்படுத்தும் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் கூட்டுத்தாபன கட்டிடத்தின் பகுதியொன்றை 1,240 மில்லியன் ஜப்பானிய யென் உதவியுடன் புதுப்பித்தல் ஆகியவற்றினால் SPMCஐ ஜப்பான் மேம்படுத்தியுள்ளது. இந்த முன்னேற்றங்களை அடுத்து SPMC அதன் வருடாந்த மாத்திரைகள் / குளுசைகள் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் எனவும் தேசிய மருந்து தேவையில் 70 சதவீதத்தைச் சந்திக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ( 2011ல் காணப்பட்ட 43.6 சதவீதத்தில் இருந்து 25 சதவீத அதிகரிப்பாகும்)

இந்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் இரு அம்சங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

-மத்திய, சப்ரகமுவ ,வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 4 இரண்டாந்தர வைத்தியசாலைகள் புதுப்பிக்கப்பட்டன. (ஆரம்பகட்ட நோய் இனங்காணல் , சிகிச்சை மற்றும் தொற்றா நோய்களுக்கான தடுப்பு ஆகியவற்றிற்கான வசதிகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கப்பட்டன. )
-86 நோயாளர்காவி வாகனங்கள் (அம்புலன்ஸ்கள்) கொள்வனவு செய்யப்பட்டன. ( வடமேல் , வடமத்திய , சம்பிரகமுவ , மத்திய , வடக்கு, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள

ஆதார வைத்தியசாலைகள் பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் மாவாட்ட வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு இவற்றை விநியோகித்துள்ளது)

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் ,அவர்களது சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கும் ,இலங்கையின் நீண்டகால அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கும் இந்த உதவிகள் வினைத்திறனான வகையில் பயன்படுத்தப்படும் என ஜப்பானிய அரசாங்கம் உளப்பூர்வமாக விரும்புகின்றது.

********************************************************

மேலதீக விபரங்களுக்கு பொருளாதார கூட்டுறவு பிரிவை தொடர்புகொள்க
தொலைபேசி: 011-269-3831~3 (ext.224)